

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதி 57 வது வார்டு தமிழக வெற்றி கழகத்தைச் சார்ந்த மகளிர்கள் ராஜாஜி மோனிஷா ஜெயஸ்ரீ அனிதா ஷாலினி ஜெனிபர் மோனிஷா மற்றும் அ.தி.மு.க.வை சார்ந்த கண்ணியம்மாள் தேவி கேத்தரின் ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அக்கட்சிகளிலிருந்து விலகி தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்வின் போது வட்ட கழகச் செயலாளர் ஜி.ராம்மூர்த்தி உடன் இருந்தார்.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதி 56 வது வார்டு பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மண்டல் துணைத் தலைவர் நவீன் குமார், கிளை தலைவர் பாம்பே குமார், பி.எல்.ஏ2 நாகராஜ், பி.எல்.ஏ2 பிரேம்குமார், கிளைச் செயலாளர் சந்தோஷ் குமார், சக்தி கேந்திர பொறுப்பாளர் கார்த்தி, சக்தி கேந்திர மகளிர் நிர்வாகிகள் துர்கா, ஷகீலா, ஸ்வேதா, கலைவாணி, நவீன்குமாரி , ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னிலையில் அக்கட்சிகளிலிருந்து விலகி திமுகவில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்வின் போது வட்ட கழகச் செயலாளர் எம்.பரத் குமார் உடன் இருந்தார்.

### தமிழ்நாட்டில் - ஒன்றிய அரசு

# மீனவர் நலன் மேம்பாட்டிற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

## மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி !

புதுடெல்லி, மார்ச் 27 -

தமிழ்நாட்டில் மீன்பிடி உள்கட்டமைப்பு மற்றும் மீனவர் நலன் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்பட்ட நிதியுதவி விவரங்கள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு: -

நம் நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில் ஆழ்கடல் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு மையங்களை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை வைத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

கடந்த மூன்று ஆண்டுகளில் மீன்பிடி உள்கட்டமைப்பு மற்றும் மீனவர் நலன் மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட நிதியுதவி விவரங்கள், ஆண்டு மற்றும் மாநில வாரியாக; தருக? மீன்பிடிக் கப்பல்கள், மீன்பிடி வலைகள் மற்றும் மீனவர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை தொடங்குவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அதன் விவரம் தருக?

அதற்கு ஒன்றிய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் @ லாலன் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

மீன்பிடித் துறை, மீன்பிடி அமைச்சகம், கால்நடை பராமரிப்பு மற்றும் 202021 நிதியாண்டு முதல் 2025-26 நிதியாண்டு வரையிலான அனைத்து மாநிலங்களிலும்/ யூனியன் பிரதேசங்களிலும் மீன்வளத் துறையின் முழுமையான வளர்ச்சிக்காக பால்வளம் ரூ.20,050 கோடி செலவில் பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவை (PMMSY) செயல்படுத்தி வருகிறது. மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு மையங்களின் வளர்ச்சி ஆகியவை PMMSY யின் கீழ் திட்டமிடப்பட்ட முக்கியமான பகுதிகளில் ஒன்றாகும். இத்தகைய மீன்வள உள்கட்டமைப்பு திட்டங்கள் மத்திய மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே 60:40 விகிதத்தில் செலவு பகிர்வு



அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. நிதி உதவியைப் பெற, சம்பந்தப்பட்ட மாநில அரசு/யூனியன் பிரதேசங்கள், மாநிலப் பங்கு, தேவையான நிலம் மற்றும் தேவையான அனுமதிகள் கிடைப்பதை உறுதிசெய்து, தொழில்நுட்பநிதி சாத்தியமான முன்மொழி வுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்திய அரசின் மீன்வளத் துறை, பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவின் (PMMSY) கீழ், தமிழ்நாட்டில் ரூ.1,237.57 கோடி மதிப்பிலான திட்டங்கள் உட்பட அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் ரூ.21,733.91 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு இது வரை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டங்கள் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதுறைகள், ஒருங்கிணைந்த நீர்வள பூங்காக்கள், உறைபனி மற்றும் குளிர்பதன சேமிப்பு வசதிகள், மீன்வளர்ப்பு (கடல், உவர் நீர் மற்றும் நீர்த்தேக்க மீன்வளம் உட்பட), உள்கட்டமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப உட்செலுத்துதல், மீன் விற்பனையை வலுப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கியது. PMMSY இணைப்பு I இல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி தமிழ் நாட்டிற்கு ரூ. 1237.57 கோடி அனுமதிக்கப்பட்டு அதில் ஒன்றிய அரசின் பங்காக ரூ.474.82 கோடி ஒதுக்கீடு செய்து இதுகாறும் ரூ.153.94 கோடி வழங்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது.

மேலும், இந்திய அரசின் மீன்வளத் துறை, 201819 நிதியாண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியை (FIDF) மொத்தமாக ரூ.7522.48 கோடியில் நாட்டில் மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பை உருவாக்கி வலுப்படுத்துவதற்காக செயல்படுத்தி வருகிறது. அடையாளம் காணப்பட்ட மீன்பிடி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மாநில அரசுகள்/யூனியன் பிரதேசங்கள், மாநில நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் உட்பட தகுதியான நிறுவனங்களுக்கு (EEs) பல்வேறு மீன்வள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த FIDF அல்லது மாற்றாக 3% வரை சலுகை நிதி வட்டி மானியத்தை வழங்குகிறது.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு FIDF இன் கீழ் ஆதரிக்கப்படும் திட்டங்களில் முதன்மையாக மீன்பிடித் துறை முகங்கள், மீன் இறங்கும் மையங்கள், உறைபனிக்கட்டிகள், குளிர்பதன சேமிப்பு, மீன் போக்குவரத்து வசதிகள், ஒருங்கிணைந்த குளிர்பதன சங்கிலி (கடல் மற்றும் உள்நாட்டுத் துறை), நவீன மீன் சந்தைகள், அடைகாக்கும் வங்கிகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள் மையங்கள், மீன் பதப்படுத்தும் அலகுகள், மீன் தீவன ஆலைகள்/ தாவரங்கள், நீர்த்தேக்கத்தில் கூண்டு வளர்ப்பு, கடல் வளர்ப்பு போன்றவை. FIDF திட்டத்தின் கீழ், மீன்வளத் துறை, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் இதுவரை மொத்தம் 228 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அதில் தமிழ்நாடு மாநிலத்தில் மொத்தம் ரூ.2404.03 கோடியில் 108 திட்டங்கள் உட்பட பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.5559.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

FIDF இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் மாநில வாரியான விவரங்கள் இணைப்பு II இல் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி தமிழ் நாட்டில் 101 அரசும், 7 தனியார் மொத்தம் 108 திட்டங்கள் ரூ.2169 கோடி ஒதுக்கீடு செய்து அதில் ரூ. 1955.98 கோடி மானியமாக வழங்கப்படுகிறது.

PMMSY திட்டமானது உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்கள் உட்பட மீனவர்களுக்கு சமூக பாதுகாப்பு நடவடிக்கையை வழங்குகிறது. பிராந்தியங்களில், முழு பிரீமியம் தொகையும் மையத்தால் செலுத்தப்படுகிறது. குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையில் (i) இறப்பு அல்லது நிரந்தர மொத்த ஊனம் (ii) நிரந்தர பகுதி ஊனத்திற்கு ரூ.2,50,000/ மற்றும் (iii) விபத்து ஏற்பட்டால் மருத்துவமனையில் சேர்க்கும் செலவுகள் ரூ.5,00,000/ அடங்கும். 25,000/.

PMMSY கீழ். தமிழகத்தைச் சேர்ந்த மொத்தம் 21.99 லட்சம் மீனவர்களை உள்ளடக்கிய 167.30 லட்சம் மீனவர்களுக்கு குழு விபத்துக் காப்பீட்டுத் தொகைக்காக 149.07 கோடி ரூபாய் பிரீமியமாக ஒன்றிய அரசு தொடங்கப்பட்டதில் இருந்து மீனவர்கள் மற்றும் மீன் விவசாயிகளின் பங்களிப்பு எதுவுமின்றி வழங்கியுள்ளது. PMMSY இன் கீழ், பாரம்பரிய மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள் மற்றும் வலைகளை மாற்றுவதற்கு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

இதுவரை, 500 மீன்பிடி படகுகள் (மாற்று) மற்றும் வலைகளுக்கான தமிழக அரசின் முன்மொழிவுகள், மத்திய உதவித்தொகை ரூ. 6.30 கோடி உட்பட மொத்தம் ரூ. 25.00 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் (2021-22 முதல் 2024-25 வரை) PMMSY இன் கீழ் காப்பீடு செய்யப்பட்ட மீனவர்களின் மாநில வாரியான விவரங்கள் இணைப்பு III இல் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி கடந்த நான்கு ஆண்டுகளில் (2021-22 முதல் 2024-25 வரை) PMMSY இன் கீழ் காப்பீடு திட்டம் வாயிலாக தமிழ் நாட்டில் 21,99,335 மீனவர்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் (2022-23 முதல் 2024-25 வரை) PMMSYன் கீழ் வழங்கப்பட்ட மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான மாநில வாரியான விவரங்கள் இணைப்பு IV இல் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி தமிழ் நாட்டில் ரூ. 309.61 கோடியில் 548365 யூனிட்டுக்கு ஒன்றிய அரசின் ஒதுக்கீடு ரூ.82.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### கடந்த மூன்று ஆண்டுகளில் தொடங்கப்பட்ட

# புதிய ரயில் பாதை திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 27-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி பின்வருமாறு :-

கடந்த 3 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட புதிய ரயில்வே திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?



கடந்த மூன்றாண்டுகளில் மற்றும் நடப்பு ஆண்டில் கள்ளக்குறிச்சி தொகுதி உட்பட தமிழ்நாட்டிற்குள் இத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? மற்றும் அவற்றின் தற்போதைய நிலை என்ன?

இத்திட்டங்களுக்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு மற்றும் ரயில்வே உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அவற்றின் எதிர்பார்க்கப்படும் தாக்கம் குறித்த விவரங்கள் என்ன?

திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும், இடைத்தரகர்களைத் தடுப்பதற்கும் ஒன்றிய அரசால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

# கமுதியில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 100 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

இராமநாதபுரம், மார்ச் 27-

இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் அ.தி.மு.க. உரிமை மீட்பு கழகத்தைச் சேர்ந்த 100 பேர் தி.மு.க.வில் நேற்று தி.மு.க. மாவட்ட செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். வருகை தந்த அனைவரையும் தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன், தெற்கு ஒன்றிய செயலாளர் மனோகரன் ஆகியோர் வரவேற்று பேசினர். இதில் அ.தி.மு.க. உரிமை மீட்பு குழு கழக வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் முத்துராமலிங்கம், மத்திய ஒன்றிய செயலாளர் அழகு சரவணன் மற்றும் ஒன்றிய துணை செயலாளர் மணி வண்ணன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் தரைக்குடி பாலகிருஷ்ணன், கிளைச் செயலாளர்கள் மாயழகு, லெட்சுமணன், ராமகிருஷ்ணன், அழகு பாண்டியன், நகரச் செயலாளர் சதீஸ்குமார் உட்பட 100 பேர் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

### சென்னை — 16 சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தல் மண்டல அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி!

## கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் அளித்தார்!

சென்னை, மார்ச் 27-

கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ இணை ஆணையாளர் (கல்வி) திருமதி. க.கற்பகம், தலைமையில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்ட தேர்தல் மண்டல அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2026க்கான அறிவிப்பினைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் வாக்குப்பதிவிற்காக சுமார் 4,079 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. வாக்குச்சாவடிப் பணிக்காக சுமார் 19,594 வாக்குச்சாவடி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான முதற்கட்ட பயிற்சி, வரும் 28.03.2026 அன்று சென்னை மாவட்டத்திலுள்ள 16 மையங்களில் தேர்தல் மண்டல அலுவலர்கள் மூலமாக அளிக்கப்படவுள்ளது.

தேர்தல் பணிக்காக 415 தேர்தல் மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பது தொடர்பாக நேற்று (26.03.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தேர்தல் மண்டல அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த புத்தாக்க பயிற்சியில் தேர்தல் நடைமுறை மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்தும், வாக்குப்பதிவிற்கு வாக்குச்சாவடிகளை சரியாக அமைப்பது குறித்தும், வாக்குச்சாவடிக்கு தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் வாக்கு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பது குறித்தும், வாக்கு இயந்திரங்களை சரியாக பயன்படுத்துவது குறித்தும், பல்வேறு படிவங்களை பூர்த்தி செய்வது குறித்தும், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிப்பது குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் வாக்குச்சாவடி அலுவலர்களின் பல்வேறு நிலைகள் மற்றும் அவர்களின் பொறுப்புகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டது.

பயிற்சி மையங்களில், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளின் விவரங்கள் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்), சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், துணை ஆட்சியர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

### வட்டச் செயலாளர் கா. தாமரைச்செல்வன் முன்னிலையில்!

# மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்டம் மாத்தூரில் தேர்தல் பணி தீவிரம்!

## புழல் எம்.நாராயணன் பணிகளைத் துரிதப்படுத்தினார்!

மாதரவம், மார்ச்.27-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்டம் மாத்தூர் பகுதியில் சட்டமன்றத் தேர்தலில் ஆற்ற வேண்டிய கழகத்திற்கான தேர்தல் பணிகள் சுறுசுறுப்பாக நடந்து வருகிறது.

மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்டம் மாத்தூர் பகுதியில் 31 பாகங்கள் உள்ளன. இந்த பாகங்களில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பாகம் வாரியாக வாக்காளர் சரி பார்த்தல் பணி, குடும்பங்கள் சரி பார்க்கும் பணிகள், தொடர்ந்து வீடு வீடாக நடைபெற்று வருகின்றன.

இந்த பணிகளில் நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தேர்தல் பணியாற்றி வருகிறார்கள்.

சின்ன மாத்தூர் பகுதிக்குட்பட்ட பாகம் எண் 214 ல் பாக முகவர் ஆசிரியர் கங்காதரன் தலைமையில் தீவிரமாக வாக்காளர் சரிபார்த்தல் பணி வீடு வீடாக நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், வட்ட செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார் ஆகியோர் நேரில் சென்று துரிதப்படுத்தி னார்கள்.

பாகம் எண் 201 க்குட்பட்ட மாத்தூர் எம்எம்டிஏ பகுதிகளில் பாக முகவர் சுந்தரி முன்னிலையில் வீடு வீடாக சென்று வாக்காளர் சரி பார்த்தல், விடுபட்டவர்கள், இறந்தவர்கள் மற்றும் குடும்ப அட்டைகள் போன்ற விவரங்கள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளையும் மேற்படி நிர்வாகிகள் நேரில் சென்று பார்வையிட்டு துரிதப்படுத்தினார்கள்.

இதே போல மாத்தூர் 19 ஆவது வட்டத்திற்குட்பட்ட அனைத்து பாகங்களிலும் வீடு வீடாக தேர்தல் பணி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் சுறுசுறுப்படைந்துள்ளது. செல்கின்ற இடங்கள் எல்லாம் பொதுமக்கள் தங்களுக்கு எண்ணிலடங்காத சலுகைகளை சாதனைகளாக வழங்கிய தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்திற்கும் வாக்களிப்போம் என்று உறுதி அளித்தனர்.



மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்டம் மாத்தூர் பகுதியில் நடைபெற்று வீடு வீடாக சென்று வாக்காளர் சரிபார்க்கும் தேர்தல் பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், ஆகியோர் நேரில் சென்று துரிதப்படுத்தினார்கள். மாவட்ட வர்த்தக அணி தலைவர் ஆர். பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், பாக முகவர்கள் ஆசிரியர் கங்காதரன், சுந்தரி மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# தி.மு.க. கூட்டணிக்கு விடுதலைப் பறவைகள் கட்சி ஆதரவு!

சென்னை, மார்ச் 27-

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு விடுதலைப் பறவைகள் கட்சி ஆதரவு தெரிவிப்பதோடு, தி.மு.க. கூட்டணிக்காக அயராது பாடுபடுவோம் என்றும், விடுதலை பறவைக் கட்சி நிறுவனத் தலைவர் டெல்லி ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

வேண்டும்! வேண்டும்! மீண்டும் மீண்டும்!

திராவிடமடல் பொற்கால ஆட்சி,

வருகிற தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. தலைமையில் மதசார்பற்ற கூட்டணி கட்சிகள் மாபெரும் அமோக வெற்றி பெற்று 234/234 சரித்திர சாதனை பெற்றிடும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தி.மு.க. கூட்டணி கட்சிகள் வெற்றிக்காக விடுதலை பறவை கட்சி அயராது பாடுபடும்.

இவ்வாறு நிறுவனத் தலைவர் டெல்லி ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் இரா.செல்வகுமார் தம்பி முன்னாள் SIVET கல்லூரி சேர்மன் இரா.ரவிக்குமார் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., அவர்கள் அன்னாரின் திருவுருவ படத்தினை திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் துணை மேயர் கோ.காமராஜ்,பகுதி செயலாளர்கள்,மண்டல குழுத்தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ், பெருங்களத்தூர் எஸ்.சேகர், படப்பை மனோகரன், கோட்டி, டி.ஆர்.கோபி,ஜா.ரவிக்குமார், ஆர்.ஜீவன்,ஆர்.செல்வகுமார், மா.கன்னியப்பன், சிட்லபாக்கம் மனோகரன், மற்றும் கழக நிர்வாகிகளும், கூட்டணி கட்சி தோழர்களும் பொது மக்களும் பெரும் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்கள்.